<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

<u>**MCOP. No.161/2021**</u>

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய XW-1 **வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வரதராஜன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது பெரம்பலூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் பெரம்பலூர் காவல்நிலைய குற்ற எண்.347/2020 வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை கொண்டுவந்துள்ளேன். விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு மோட்டார்சைக்கிளில்கள் மோதியபின்னர் அவை ரோட்டின் வடபுறம் கிடந்ததாக துலங்கியது. எசனையிலிருந்து போகும்போது அது வலதுபுறமாகும். பொதுவாக விபத்து நடந்த இடத்தை உடனடியாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பது வழக்கம்தான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட விபத்து நடந்த இடத்தை ஆவணங்களின் படி புகைப்படமோ, வீடியோ எடுக்கப்படவில்லை. இந்த வழக்கில் அவ்வாறு புகைப்படம், வீடியோ எடுக்காததற்கு குறிப்பிட்ட காரணம் கிடையாது. விபத்தானது எசனையிலிருந்து போகும்போது இடதுபுறமாக நடந்தது என்றால் சரியல்ல. எங்கள் காவல்நிலையத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு செல்வதற்கு முன்னர் நெடுஞ்சாலை ரோந்து போலிசார் அங்கிருந்தார்கள் என்றால் ஆவணங்களின் படி அவ்வாறு துலங்கவில்லை. இறந்துபோனவரின் கவனக்குறைவாகதான் விபத்து நடந்தது என்றும், அவர் குடும்பத்திற்கு சகாயம்

செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்சரியல்ல.

<u>**மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

விபத்து சம்மந்தமாக முதல்தகவல்அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கை ரவி என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் ரவி ஓட்டிய வாகனத்தில் அவருக்கு பின்னால் 2 நபர்கள் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரிவரைபடத்தின் படி விபத்து ரோட்டின் இடதுபுறம் வடக்குதிசையில் நடந்ததாக உள்ளது.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.